Embassy of the United States of America
Colombo

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: shenjy@state.gov ● http://srilanka.usembassy.gov

Release No. 20150217T

## வர்த்தக சாத்தியங்களை விருத்தி செய்வதற்கு இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு அமெரிக்கா உதவி

**பெப்ரவரி 17, 2016:** அமெரிக்க வர்த்தகத் திணைக்களம் மற்றும் அமெரிக்க சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்பு பிரிவினைச் சேர்ந்த சட்ட வல்லுனர்கள் இலங்கை சுங்கத்தின் 20 சிரேஷ்ட அதிகாரிகளுடக்கு கடந்த வாரம் கொழும்பில் வர்த்தகத்தை பரவலாக்குவதற்கான சுங்க நடைமுறைகளை மறுசீரமைத்தல் தொடர்பில் ஒத்துழைப்பு வழங்கினர். வர்த்தக வினைத்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தல், இலங்கை தமது ஏற்றுமதி ஆற்றலை மேலும் முழுமையாக விருத்தி செய்தல், மற்றும் முதலீட்டுச் சந்தர்ப்பங்களை முன்னிறுத்தல் என்பது சார்ந்ததாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

*"அனைத்து இலங்கையர்களுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதற்கு அரசாங்கம், தனியார் துறை, அபிவிருத்தி குழுக்கள் என இலங்கையின் அனைத்து மட்டங்களுடனும் அமெரிக்கா பணியாற்றி வருகின்றது"* என அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷப் தெரிவித்தார். *"இந்த மறுசீரமைப்புகள் இலங்கையானது வர்த்தகத்திற்கு தயாராக இருக்கின்றது என்ற முக்கியமான சமிக்ஞையை வர்த்தக சமுதாயத்திற்கு கொண்டு செல்லும்"* என அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்கத் தூதரகத்தின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்ட மூன்று நாட்கள் செயலமர்வும், வர்த்தக வசதியாக்கல் தொடர்பான உலக வர்த்தக நிறுவன உடன்படிக்கையின் (TFA) கீழ் எட்ட வேண்டிய வாக்குறுதிகளுக்கு இலங்கையை சிறந்த நிலைக்கு தயார்படுத்துவதாக அமைந்திருந்தது. முன்கூட்டிய தீர்மானங்கள், மதிப்பீடு மற்றும் வகைப்பாடு, உள்ளடங்கலாக இலங்கையின் ஏற்றுமதி-சார் அபிவிருத்தி திட்டம் மற்றும் சுங்க முறையீடுகளை எட்டுவதற்குத் தேவையான பிரதான விடயங்களை இந்த அமர்வுகள் கவனத்தில் எடுத்துக் கொண்டன. மேலதிகமாக, சுங்க முறையீடுகளை கையாளும் 30 மாவட்ட மற்றும் நீதவான் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் அமெரிக்க வல்லுனர்கள் ஒரு நாள் பயிற்சியளித்தனர்.

*"இலங்கையில் வர்த்தகம் செய்வதற்கான சட்டச் சூழலை மேம்படுத்துவது உள்ளூர் தொழில் முனைவோருக்கும், அமெரிக்க நிறுவனங்களுக்கும் பொருளாதார சந்தர்ப்பத்தை விருத்தி செய்யும்"* என அமெரிக்காவின் வர்த்தக திணைக்களத்தின் வர்த்தகச் சட்ட அபிவிருத்தி நிகழ்ச்சியின் (CLDP) சட்ட-ஆலோசகர் மேகன் மெக்மிலன் தெரிவித்தார். *"இந்த இலட்சிய மறுசீரமைப்புகள் சுங்க வளங்களை பாதுகாப்பதன் ஊடாக உலக விநியோகச் சங்கிலியில் இலங்கையின் பிணைப்பை வலுப்படுத்தும்"* என அவர் மேலும் குறிப்பிட்டார்.

அமெரிக்க அரசாங்க நிறுவனங்களுடனான பங்காளித்துவத்துடன் இலங்கையில் CLDPஇனால் முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள செயலமர்வு தொடர்களின் முதலாவது பகுதி செயலமர்வே இந்த வாரம் நடைபெற்றது.

###




**படவிளக்கம்:** அமெரிக்க சுங்க மற்றும் எல்லைப்பாதுகாப்பு மற்றும் வர்த்தக திணைக்களத்தின் சட்ட வல்லுனர்கள் இலங்கை சுங்கத்தின் 20 சிரேஷ்ட அதிகாரிகளுடன் வர்த்தக சமுதாயத்திற்கு பலனளிக்கும் சட்ட சீர்திருத்தங்கள் தொடர்பில் ஒத்துழைப்பு வழங்கினர்.




**படவிளக்கம்:** சுங்க நடைமுறைகளின் வினைத்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்கு உதவு மூன்று நாட்கள் செயலமர்வின் இறுதியில் இலங்கை சுங்க அதிகாரிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.